Registered as a Newspaper

BITSMANS
INSTITUTES
MANIPAY.
3 வகுப்பு பிரிவு 86 O/L, 9 வகுப்புகளுக்குரிய
சகல பாடங்களும்
ஆரம்பம்: 6-1-86 3-00 P.M
விஞ்ஞானம் - விக்கி
கணிதம் - அருட்செல்வம்
வர்த்தகம் - ராஜன்
தமிழ் - பாலா
ஆங்கிலம் - மகேசன்
மூ.சக்கல்வி - ராஜன், பாலா

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடு நிலைமை

விலை ரூ-1/=

BITSMANS
INSTITUTES
MANIPAY.
8ம், 7ம், 6ம்
வகுப்புகளுக்குரிய
கணிதம், விஞ்ஞானம் உட்பட ஏனைய பாடங்களும்
5ம் வகுப்பு புலமைப் பரிசுக்குரிய வகுப்பும்
ஆரம்பம்: 6-1-86 3-00 P.M

சுடர்:- 1 யாழ்ப்பாணம் குரோதன ஹூ மார்கழி மீ 22 உ திங்கட்கிழமை ஹிஜ்ரி 1406 ரபி. ஆகிர் பிறை 24 (06-01-1986) UTHAYAN —A LIVELY TAMIL DAILY கதிர்:-41

திக்குத்திக்காக வீதிகளில் சூடுபட்டு சுருண்டு விழுந்தனர் பொதுமக்கள்

# தரை, ஆகாயத் தாக்குதல்களால் நேற்று

# யாழ்நகர் 2ஆவது நாளாக கொலைக்களம்!!

## மூன்று பெண்கள் உட்பட எட்டுப்பேர் மரணம்; அவர்களில் சுங்க அதிகாரிகள் மூவர்

## 38 பேர் காயத்துடன் ஆஸ்பத்திரியில் அனுமதி; 20 பேர் சிறு காயங்களுக்குச் சிகிச்சை பெற்றனர்

—உதயன் செய்தியாளர்கள்.- வனிதராஜன், க. இரத்தினராஜசிங்கம்—

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாண நகரம் நேற்றுத் தொடர்ந்து இரண்டாவது நாளாகக் கொலைக்களமானது.

தரையிலிருந்தும் வானத்திலிருந்தும் சீறிப்பாய்ந்த துப்பாக்கி வேட்டுகள் எட்டுப்பேரின் உயிரைப் பறித்தன. அவர்களில் மூவர் பெண்கள் ஐவர் ஆண்கள். சுங்கப் பகுதி அதிகாரிகள் மூவரும் இந்த எட்டுப்பேரில் அடங்குவர்.

துப்பாக்கிக் குண்டு துளைத்த காயங்களுடன் 38 பேர் யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

குண்டுபட்ட சிறுகாயங்களுக்குச் சிகிச்சைபெற்ற சுமார் 25 பேர் வீடு திரும்பிவிட்டனர்.

வீதிகளில் சென்றவர்கள் திக்குத்திக்காக வந்து பாய்ந்த துப்பாக்கிச் சூடுகள் பட்டதும் சுருண்டு விழுந்தனர்.

யாழ்நகர் நேற்றுப் பிற்பகல் தொடக்கம் மாலைவரை ஒரு போர்க்களம் போல் காட்சியளித்தது.

நகரின் நாலாபக்கங்களிலும் வீதிகளிலும் வாகனங்களிலும் செங்குருதி பாய்ந்து, காய்ந்து கறைபடிந்திருந்தது.

நேற்று நடந்ததொடர் சம்பவங்கள்பற்றிக் கூறப்படுவதாவது:-

நேற்றுப் பிற்பகல்3-50 மணி இருக்கும்.

சரமாரியான துப்பாக்கி வேட்டுக்கள் கோட்டைப் பக்கம் இருந்து பஸ் நிலையத்தை நோக்கி வரத் தொடங்கின பண்ணை வீதிப் பக்கமும் துப்பாக்கிச்சூடுகள் பாய்ந்தன.

பண்ணை வீதிப் பக்கம் வந்த துப்பாக்கிச் சூடுகள் அந்தவீதியால் வந்த பல வாகனங்களைத் தாக்கின.

மினிவான் ஒன்று, மூன்று கார்கள், இ போ. சவைச் சேர்ந்த 'பிறேக் டவுண் சேர்விஸ்' லொறி ஒன்று — ஆகியவை சூட்டினால் கடும் சேதமடைந்தன.

கார் ஒன்றில் வந்த சுங்க திணைக்களப் பணியாளர்கள் மூவர் அந்த இடத்திலேயே பலியானார்கள். அவர்களில் ஒருவர் இளம் பெண்.

அவர்களுடன் வந்த உதவிச் சுங்க கலெக்டர் திரு. செல்லையா கணேஷ் படுகாயமடைந்தார்.

செய்தி அச்சுக்குப் போகும்போது அவருக்கு அவசர சத்திர சிகிச்சை செய்யப்பட்டுக் கொண்டு இருந்தது.

சுங்க அதிகாரிகளுடன் வந்த மற்றைய இரண்டு பேரைக் காணவில்லை. அவர்கள் என்ன ஆனார்களோ தெரியவில்லை.

பண்ணைப் பக்கத்தில் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்கான மூன்று காரும் லொறியும் அந்த இடத்திலேயே நேற்று இரவு நிறுத்தப்பட்டிருந்தன.

மினிவானை சூடுதாக்கியதில் அதில்வந்த இளம் பெண் ஒருவர் மரணமடைந்தார்.

துப்பாக்கிச் சூட்டினால் மினிவானின் ரயர்களும் காற்றுப் போயின. எனினும் மினிவானை அதன் சாரதி ஒருவாறு நகருக்கு கொண்டு வந்து சேர்த்தார்.

### 20 நிமிடங்களின் பின்னர் மீண்டும்

இந்த துப்பாக்கிச் சூட்டு களேபரம் நடந்து 20 நிமிடங்கள் கழிந்த பின்னர் நகரில் மீண்டும் குண்டு வெடிச் சத்தங்க

(4ஆம் பக்கம் பார்க்க)

## வள்ளுவர் சிலைக்கு முன்பாகப் பலர் சுருண்டு விழுந்தனர்

யாழ்ப்பாணம், ஜன. 6

நேற்றைய சம்பவத்தில் முனீஸ்வரன் வீதிக்கு நேரே பஸ் நிலையத்துச் சந்தியில் இருக்கும் வள்ளுவர் சிலைக்கு அருகில் வைத்தே பலர் காயமடைந்தனர்.

ஆஸ்பத்திரியில்இருந்து கொண்டு வரப்பட்ட ஸ்ரெச்சர்களில் வள்ளுவர் சிலைக்கு அருகே விழுந்து கிடந்தவர்களை இளைஞர்கள் தூக்கிப் போட்டுக் கொண்டு ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போவதைக் காணக் கூடியதாக இருந்தது.

முனீஸ்வரன் வீதிப்பக்கமாக இருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்களின் மத்தியிலும் இளைஞர்கள் துணிகரமாகக் காயம் அடைந்தவர்களை ஆஸ்பத்திரிக்கு ஓடி ஓடிக் கொண்டு போய்ச் சேர்த்தனர்.

## காயமடைந்தவர்கள் பெயர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜன. 6

நேற்று யாழ்நகரில் நடந்த சூட்டுச் சம்பவங்களில் காயம் அடைந்தவர்கள் விவரம் வருமாறு;-

1. கந்தையா கோணமலை, வயது 33. சுன்னாகம் வாசி மினிபஸ்ஸில் கண்டக்டராக வேலை பார்ப்பவர். காலில் காயமடைந்தார்.

2. குணரத்தினம் ராஜ்மோகன் வயது 22 சிவன பண்ணை வீதி வாசி. பஸ் நிலையத்தில் வைத்து காலில் இவருக்குத் துப்பாக்கிச் சூடுபட்டது.

3. சின்னத்தம்பி சிவராசா வயது 25. யாழ் நாவலர் வீதி வாசி. பஸ் நிலையத்தில் வைத்து காலிலும் கையிலும் சூடு பட்டது.

4. நடேசன் நவரத்தினம் வயது 17. கன்னாதிட்டிவாசி பஸ் நிலையத்தில் வைத்து காலில் சூடுபட்டது.

5. சிங்கராசா சர்வானந்தன் கட்டைப்பிராய் வாசி. வயது 23

6. மாசிலாமணி மன்மதராசா வயது 19 புங்குடுதீவுவாசி காலில் சூட்டுக்காயம்.

7. ஐயாத்துரை ஜோன்சன் வயது 19 குருநகர் வாசி.

8. தி. சந்திரன் வயது 16. காலில் சூட்டுக்

( 4ஆம் பக்கம் பார்க்க)



முச்சந்தி முரளி

அப்ப இனி கோயில் திருவிழாவை எண்ணுற மாதிரி உந்தத் தாக்குதல், பனி விஷயங்களை நாட்கணக்குச் சொல்லி எண்ண வேண்டிய நிலை வந்திட்டுதோ!

## ★ பிந்திய செய்தி

நேற்றைய சம்பவத்தில்படுகாயமடைந்தமூவரின் நிலை ஆபத்தான கட்டத்தில் இருப்பதாக ஆஸ்பத்திரி வட்டாரங்கள் இன்று அதிகாலை தெரிவித்தன.

இவர்கள் மூவருக்கும் அவசர சத்திர சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளது. உதவி சுங்க கலக்டர் திரு செல்லையா கணேஷ் அவர்களில் ஒருவர்.

அவருக்கு தலையில் சத்திர சிகிச்சை செய்யப்பட்டிருக்கிறது.

## லொறிக்குள் படுத்திருந்தும் குண்டிலிருந்து தப்பமுடியவில்லை

நல்லூர், ஜன. 6

நேற்று மாலை 4மணியளவில் இ போ.ச. பிரேக் டவுண் சேர்விஸ் லொறியில் சுருவிலிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி நானும் மெக்கானிக்கும் வந்து கொண்டிருந்தோம்.

பண்ணைப் பாலத்தை எமது லொறி அடைந்தது.

அப்போது கோட்டைப் பக்கத்திலிருந்து குண்டுகள் சீறிக்கொண்டு வந்து எமது லொறியைத் தாக்கின.

இதனால் லொறியின் கண்ணாடிகள், றைவிங் வீல் ஆகியவை உடைந்து நொறுங்கின

நானும் மற்றவரும் லொறிக்குள் வீழ்ந்து படுத்துக் கொண்டோம்.

குண்டுகள் தொடர்ந்து வெடித்துக் கொண்டே

(4-ம் பக்கம் பார்க்க)

## யாழ். ஆஸ்பத்திரியில் கண்ட அவலங்களும் கேட்ட அழுகுரலும்!

யாழ்ப்பாணம், ஜன.6

யாழ்ப்பாணம், பெரியாஸ்பத்திரியில் நேற்றுக் கண்ட அவலங்கள், கேட்ட துயரக்கதைகள் மனதைப் பிழிய வைத்தன.

படுகாயமடைந்து-குருதிப் பெருக்கில் நனைந்து-குற்றுயிரும் குறை உயிருமாக அடுத்தடுத்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட மக்களின் அவல நிலை கண்டு நெகிழாதார் யார்?

நேற்று மாலை சுமார் 4 மணியளவில் இருந்து சுமார் 6 30 மணிவரை காயமடைந்தவர்கள் பெரும் எண்ணிக்கையில் மினிவான்களிலும் கார்களிலும் ஆஸ்பத்திரிக்கு அடுத்தடுத்து கொண்டு வரப்பட்டார்கள்.

எங்கும் முனகலும் அழுகைக் குரலுமாக இருந்தன.

டாக்டர்கள், தாதிமார், சிற்றூழியர்கள் அங்கும் இங்குமாக வேகமாக ஓடி ஓடி அவசர சிகிச்சை ஏற்பாடுகளைச் செய்து கொண்டிருந்தார்கள்.

ஆண்கள் வார்ட்டில் இடவசதி போதாது இருந்தபடியால் காயமடைந்த ஆண்கள், பெண்களுக்கு என ஒதுக்கப்பட்ட வார்டுகளிலும் அனுமதிக்கப்பட்டனர்.

### இரத்தம்

### இரத்தம்

துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுக்குள்ளானவர்களுக்கு ஏற்றுவதற்கு பெருமளவு இரத்தம் தேவைப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த சம்பவங்களினால்

(4ஆம் பக்கம் பார்க்க)

## இறந்தவர்கள் விவரம்

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ் நகரில் நேற்று நடந்த சூட்டுச் சம்பவங்களில் இறந்தவர்களின் விவரம் வருமாறு;-

1. தர்மலிங்கம் திலகேந்திரன், யாழ் சுங்கத் திணைக்கள அதிகாரி.

2. செபமாலை தேவதாசன், நாவாந்துறை வாசி, யாழ். சுங்கத் திணைக்கள அதிகாரி.

3. பாலேந்திரா, வயது 32, வண்ணார் பண்ணை வாசி.

4. 35 வயது மதிக்கத்தக்க ஒரு பெண், நெற்றியில் சூட்டுக் காயம். இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

5. செல்வி சாந்தி 17 வயது. மாதகல்வாசி.

6. அன்னலிங்கம், நாட்டாண்மைத் தொழில் செய்பவர். நெஞ்சிலும், தலையிலும் சூட்டுக்காயங்கள்.

7. அடையாளங் காணப்படாத ஒரு ஆணின் சடலம்.

8. செல்வி ரூபா தர்மலிங்கம், கந்தர்மடம் வாசி, சுங்க இலாகா ஊழியர்.

## சனிக்கிழமை சம்பவத்தில் இறந்தோர் எண்ணிக்கை ஐந்தாக அதிகரிப்பு

நல்லூர், ஜன. 6

நேற்று முன்தினம் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ் பெரியாஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டு உயிருக்கு ஊசலாடிக் கொண்டிருந்த நடராசா குணம் (26 வயது) நேற்றுக் காலை 5. மணி அளவில் மரணமானார்.

இவரது சடலம் ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டு சில மணித்தியாலங்களின் பின்னர் சிலரால் எடுத்துச் செல்லப்பட்டது.

இதனால் இவரது மரண விசாரணை நேற்று நடைபெறவில்லை.

இந்த துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் ஏற்கனவே நான்கு பேர் உயிரிழந்தனர் என்பது தெரிந்ததே.

## புதிய இணைப்பு அதிகாரி

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ் மாவட்ட இணைப்பு அதிகாரியாக திரு. ரூபசிங்கா இன்று பதவி ஏற்கின்றார்.

இதுவரை இணைப்பு அதிகாரியாக பதவி வகித்த பிரிகேடியர் ஹமில்டன் வனசிங்க நேற்றுடன் இடமாற்றலாகிச் சென்றார்.

## கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் உள்ளே இருக்க கோட்டையிலிருந்து வந்த சூடுகள்

யாழ்ப்பாணம், ஜன. 6

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் யாழ்ப்பாணம் கோட்டைக்குள் கலந்துரையாடிக் கொண்டிருந்த வேளையில் தான் கோட்டைக்குள்ளிருந்தும் ஆகாயத்திலிருந்தும்வேட்டுகள் யாழ் நகரினுள் தீர்க்கப்படத் தொடங்கின.

பிற்பகல் 3. 50 மணி அளவில் துப்பாக்கி வேட்டுக்கள் கோட்டையில் இருந்து பட்டினத்தை நோக்கி வரத் தொடங்கியதும் அதுபற்றி யாழ் அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் பிரிகேடியர் திரு. ஹமில்டன் வனசிங்காவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார் எனத் தெரிகிறது.

இது பற்றி விசாரித்துச் சொல்வதாக பிரிகேடியர் பதில் சொன்னாராம்.

சிறிது நேரத்தின் பின்னர், ஆத்திரமூட்டப்பட்டதன் காரணமாக ஆயுதப்படையினர் சுட்டதாக அரசாங்க அதிபரிடம் அவர் சொன்னார் என்றும் அறியவருகிறது.

துப்பாக்கி வேட்டுக்கள் தீர்க்கப்பட்டதை, கண்காணிப்புக் குழு உறுப்பினர்களும், கூட்டம் நடந்த அறையில் இருந்து வெளியே வந்து பார்த்தனர்.

யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இன்று காலை ஹெலிக்கொப்டர் மூலம் பலாலி சென்று அங்கு இருந்து

(4ஆம் பக்கம் பார்க்க)

## பின்னுக்கு குண்டு என்றதும் முன்னுக்கு வந்தேன் அப்போது விழுந்தது

நல்லூர், ஜன. 6

பிற்பகல் நான்கு மணியளவில் யாழ்நகரில் துப்பாக்கிச் சூட்டுச் சத்தம் கேட்டது.

அதைத் தொடர்ந்து பெற்றோல் போத்தலுடன் அருகில் இருந்த தேநீர்க் கடைக்குள் ஓடினேன்.

அப்பொழுது கடை முதலாளி கடைக்குப் பின்னால் குண்டுகள் வருகிறது எல்லோரும் முன்னுக்குப் போங்கள் என்றார்.

நானும் இன்னும் சில பேரும கடை முன்பக்கமாகப் போனோம.

அப்போது மேலிருந்து குண்டு ஒன்று எமது கடைக்கு முன்னால் விழுந்து வெடித்துச் சிதறியது.

இதனால் எனது தலை கழுத்து. கை ஆகியவற்றில் காயம் ஏற்பட்டது.

என்.சின்னராசா பெற்றோல் வியாபாரி இவ்வாறு தெரிவித்தார்.

## சுபநேரம்

06 - 01 - 1986

திங்கட்கிழமை

சுபநேரம்

12.31 முதல் 2-01 வரை

ராகு காலம்

8.01 முதல் 9 31வரை

ஏகாதசி

இவை இரவுக்கும் பகலுக்கும் பொருந்தும்

## இலங்கையுடன் பேச வாஜ்பாய் தலைமையில் தூதுக்குழு இலங்கை வரும்

சண்டிகார், ஜன. 6

இந்தியாவின் முன்னாள் வெளிநாட்டு அமைச்சர் திரு. அதல்பிஹாரி வாஜ்பாய் தலைமையில் பாரதீய ஜனதா கட்சிக்குழு ஒன்று இலங்கை வருகின்றது.

இலங்கை இனப்பிரச்சினை பற்றித் தமிழ்ப் போராளிகளுடனும் இலங்கை அரசுடனும் பேச்சுக்கள் நடத்தவே திரு. வாஜ்பாய் தலைமையிலான குழுவை இலங்கைக்கு அனுப்பி வைப்பது என்று, ஜனதாக் கட்சி தீர்மானித்துள்ளது.

பாரதீய ஜனதாக் கட்சியின் 3 நாள் மாநாட்டின் இறுதி நாள், இத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இலங்கைத் தமிழர் பிரச்சினை பற்றி பாரதீய

(4ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## 'சிலுக்கு'க்கு வந்த சுளுக்கு

சிங்கப்பூர் தேசிய அரங்கத்தில் தமிழ் ரஸிகர்கள் நிரம்பி வழிந்தனர். கலை நிகழ்ச்சியில் ஆடலழகி சிலுக்கு தோன்றுகிறார். ஒரே ஜனத்திரள். திரை விலகியது. ரஸிகர்களின் கண்கள் மேடையைச் சுற்றி மொய்க்க ஆரம்பித்தன.

ஆனால் அந்த வண்டுகள் தேடிய வண்ண மலரோ 'முழு' ஆடையுடன் மேடையில் தோன்றியது கண்டனர். பெருத்த ஏமாற்றம். அறிமுகக் காட்சி தானே என்று ஆறுதல் அடைந்தனர்.

அடுத்து, மெல்லிசை மன்னர் எம். எஸ். வி. யின் இசை நிகழ்ச்சி என்று அறிவித்தவுடன் நிகழ்ச்சி ஆரம்பமாகியது. ரஸிகர்களுக்கு இருப்புக் கொள்ளவில்லை. ஒப்புக்கு ஒரு சில கைதட்டல்கள். பாவம் எம். எஸ். வி.

கூட்டம் முணுமுணுக்க ஆரம்பித்துப் பின்பு சலசலப்பாக மாறியது. 'நடன உடைகள் அணிய வேண்டாமா? கவர்ச்சி மேக் அப்புக்குச் சிறிது நேரம் ஆகும்' என்றார் ஒருவர்.

'கவர்ச்சி ஆட்டத்துக்கு உடை அலங்காரம் என்ன வேண்டிக்கிடக்கு' பச்சையாகவே பரிகாசம்பண்ணினார் ஒருவர். அப்பொழுது அறிவிப்பாளர் ஒரு குண்டைத் தூக்கிப் போட்டார்.

'அண்மையிற் படப்பிடிப்பில் ஏற்பட்ட விபத்தில் சிலுக்குக்கு ஒரு காலில் சுளுக்கு. ஆகவே, அவர் இன்று ஆட முடியாமைக்கு வருந்துகிறோம்'

அவ்வளவு தான். பொறுத்தது போதும் என்று பொங்கி எழுந்தனர் ரஸிகர். நல்லவேளை சிங்கப்பூர் தெருக்களில் கற்கள் கிடைக்காமற் போயிற்று. மேடை தப்பியது தமிழிலும் மலாயிலும் ஆங்கிலத்திலும் சொல்லம்புகளை மாறி மாறி வீசி எறிந்து விட்டு வீடு திரும்பினர். கடைசியில் பொலீஸ் காவலுடன் 'சிலுக்'கை அழைத்துச் செல்ல வேண்டியதாயிற்று.

திரைக்குப்பின் சிலுக்குக்கும் நிகழ்ச்சி ஏற்பாட்டாளர்களுக்குமிடையில் சூடான வாக்குவாதம். பாவம் சிலுக்கு. அழுதே விட்டார்.

சினிமாவில் நடன டைரக்டரின் ஆணைக்கிணங்க அங்க அசைவுகளைச் செய்துதான் பழக்கமாம். மேடைகளில் தனியே ஆடிப் பழக்கமில்லையாம். இதை முன்பே ஏற்பாட்டாளரிடம் கூறியும், ''நீங்கள் ஆட வேண்டியதில்லை, சும்மா மேடையில் தோன்றினாலே போதும்'' என்று கூறி அழைத்து வந்தார்களாம்.

சிங்கப்பூருக்கு வந்ததும் ஒரு மாதிரிப்படிய

தினசரி சினிமா

வைத்து ஆடவைத்து விடலாம் என்ற எண்ணம் அவர்களுக்கு. ஆனால்சிலுக்கு அதற்கு இணங்கவில்லை. ரஸிகர்களிடையே இப்படி ஒரு அவப்பெயர் வந்ததே என்று அவர் அங்கலாய்த்தார்.

இதன் பின்பு, கவலை கொண்ட சிலுக்கு சிங்கப்பூரில் எல்லா நிகழ்ச்சிகளையும் ரத்துச் செய்து விட்டு தப்பித்தோம், பிழைத்தோம் என்று சென்னை வந்து விட்டார். ஏற்பாட்டாளர்களுக்கு ஏற்பட்ட நஷ்டத்தை சிலுக்கே ஏற்றுக் கொண்டதாகத் தெரிகிறது.

என்றாலும், 'அழகுக் கவர்ச்சிநடனம் ஆடத் தெரியாத சிலுக்கு என்ற அவப்பெயரை சிங்கப்பூர் ரஸிகர்களிடம் அவர் இப்படி வாங்கிக் கட்டிக் கொண்டிருக்க வேண்டாம்.

சமஷ்டி ஆட்சி அமைப்பின் கீழ்

# மாநிலங்களை சமமாக நடத்த வேண்டும்

## ஆந்திரா முதல்வர் ராமராவ் கோரிக்கை

ஹைதராபாத், ஜன. 5

சமஷ்டி ஆட்சி அமைப்பின் கீழ் இந்தியாவின் சகல மாநிலங்களும் சமமாக நடத்தப்படவேண்டும்.

இப்படி ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என். டி. ராமராவ் கூறினார்.

தெலுங்கு தேசம் கட்சியின் மூன்று நாள் மாநாட்டின் முடிவில் பேரணி ஒன்று நடந்தது. அதன் பின்னர் பொதுக் கூட்டம் ஒன்றில் திரு. ராமராவ் பேசினார்.

மாநிலங்களுக்கு சுய நிர்வாகத்தை உறுதி செய்யக் கூடியதாக கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும்.

மாநிலக் கட்சிகள், தேச விரோதமானவை என்று இந்திரா காங்கிரஸ் கண்டிப்பது வருத்தத்தைத் தருகின்றது — இப்படி திரு. ராமராவ் சொன்னார்.

பஞ்சாப் மாநில முதலமைச்சர் திரு. சுர்ஜித்சிங் பர்னாலா பேசுகையில்,

தேசிய இலட்சியத்துக்காக சீக்கிய சமூகம் முன்னணியில் நின்று உழைத்துள்ளது. நாட்டின் விடுதலைக்கும் ஒருமைப்பாட்டுக்கும் சீக்கிய மக்கள் தியாகம் செய்தனர்— என்று சொன்னார்

மற்றும் பல எதிர்க்கட்சித் தலைவர்கள் கூட்டத்தில் பேசினர்.

போதை வஸ்து வைத்திருந்த

## மொறிஷியஸ் எம்.பிக்கள் கைது

### நெதர்லாந்தில் சம்பவம்

போர்ட்லூயி, ஜன. 5

மொறிஷியஸ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் நான்கு பேர் ஹெரோயின் போதை வஸ்து வைத்திருந்தார்கள் என்ற சந்தேகத்தில் கைது செய்யப்பட்டனர்.

நெதர்லாந்து நாட்டில் அம்ஸ்டர்டாமில்வைத்து இந்த நான்குஎம்.பிகளும் கைது செய்யப்பட்டதாக மொறிஷியஸ் பிரதமர் திரு. அனிரூட் ஜகன்னாத் தெரிவித்தார்.

ஆளும் கட்சிக் கூட்டணியில் அங்கம் வகிக்கும் மொறிஷியஸ் தொழிலாளர் கட்சியைச் சேர்ந்தவர்களே இந்த நான்கு எம். பிகள்.

பம்பாயில் இருந்து இந்த நான்குஎம்.பிகளும் ராஜதந்திர பாஸ்போர்ட்டில் நெதர்லாந்துக்குச் சென்றிருந்தனர். இவர்களிடம் இருந்து20கிலோ ஹெரோயின் கைப்பற்றப்பட்டது.

## பத்திரிகைத் தணிக்கை உகண்டாவில் அமுல்

கம்பாலா, ஜன. 5

20 ஆண்டுகளின் பின்னர் உகண்டாவில் பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

உகண்டாத் தலைவர் லெப்டினன்ட் ஒக்கலொ, இந்த உத்தரவைப் பிறப்பித்தார்.

நாட்டின் தேசிய பந்தோபஸ்துப் படைகள் 240 பொதுமக்களைச் சுட்டுக் கொலை செய்தன என்று பத்திரிகைகள் செய்திகள் வெளியிட்டதைத் தொடர்ந்தே பத்திரிகைத் தணிக்கை அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது.

# வெளி உலகில்

## அரபு நாடுகளோடு சீன முஸ்லிம்கள் தொடர்பு

### உறவை வளர்க்க சீன அரசு அக்கறை

பீகிங், ஜன. 5

சீனாவில் உள்ள முஸ்லிம மாநிலம், அரபு நாடுகளுக்கு 73லட்சம் டாலர் பெறுமதியான பொருள்களை ஏற்றுமதி செய்துள்ளது.

நவசீன செய்தி ஸ்தாபனம் இதை அறிவித்துள்ளது.

நின்ச்ஸியா மாநிலத்தில் 3லட்சம் முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

சீனாவில் 2கோடி முஸ்லிம்கள் வாழ்கின்றனர்.

அரபு நாடுகளுடன் பொருளாதார உறவுகளை வைத்துக் கொள்ளவும் சவூதி அரேபியாவுடன் ராஜரீக உறவுகளை வைத்துக் கொள்ளவும் சீனா முன்வந்துள்ளது.

தைவானுடன், சவூதி அரேபியா இப்போது ராஜரீக உறவுகளை வைத்துள்ளது.

## பாடகர் நெல்சன் விமான விபத்தில் மரணம்

டெக்ஸாஸ், ஜன. 5

ரொக்அன்ரோல் இசையைப் பிரபலமாக்கியவர்களில் ஒருவரான பாடகர் றிக்கி நெல்ஸன் விமான விபத்து ஒன்றில் சிக்கி மரணமானார்.

அவரின் இசைக்கோஷ்டியைச் சேர்ந்த வேறு ஆறு பேரும் இந்த விபத்தில் மாண்டனர்.

## கடந்த ஆண்டின் சிறந்த மனிதர்

### சீனத் தலைவர் ஷியோபிங்

நியூயார்க், ஜன. 5

அமெரிக்காவின் பிரபல ''டைம்'' சஞ்சிகை, 1985ஆம் ஆண்டின் சிறந்த மனிதர் என்று சீனத் தலைவர் டெங் ஷியோபிங்கைத் தெரிவு செய்துள்ளது.

1978இலும் சிறந்த மனிதராக இவரையே ''டைம்'' சஞ்சிகை தெரிவு செய்தது.

''மார்க்ஸிய பழமை எண்ணங்களுக்குச் சவால் விடக் கூடிய அளவுக்கு சீனாவில் பெருமளவில் சீர்திருத்தங்களை அறிமுகம் செய்தது. அதன் மூலம் கோடிக்கணக்கான உற்பத்தி முயற்சிகளுக்கு புதிய வாய்ப்புத் தேடிக் கொடுத்தது'' — இவற்றுக்காகவே சீனத்தலைவர் டெங்கை 1985இன் சிறந்த மனிதராக தெரிவு செய்ததாகவும் அமெரிக்க ''டைம்'' சஞ்சிகை அறிவித்தது.

## உலக ஜனத்தொகை அதிகரிக்கிறது

ஐ. நா, ஜன 5

1985 ஆம் ஆண்டின் நடுப்பகுதி வரை உலகஜனத்தொகை 7கோடி 90 லட்சத்தால் அதிகரித்துள்ளது

இது 1984 ஆம் ஆண்டு ஜனத்தொகையிலும் பார்க்க 1.7 சத வீதம் அதிகரித்தது.

இப்படி ஐ.நா புள்ளி விவரங்கள் இதனை வெளியிட்டது.

1985இல் உலக ஜனத்தொகை 484 கோடியாக இருந்தது.

ஆபிரிக்காவில் ஜனத்தொகை 3சத வீதம் அதிகரித்தது. 55 கோடி மக்கள் இன்று ஆபிரிக்காக் கண்டத்தில் வாழ்கின்றனர்.

தென் அமெரிக்காவின் ஜனத்தொகை 2.3 சத வீதமாக அதிகரித்தது. 26கோடியே 90லட்சம் மக்கள் தென் அமெரிக்காவில் வாழ்கின்றனர்.

1.7 சதவீத அதிகரிப்பை அடுத்து 282 கோடி மக்கள் ஆசியாக் கண்டத்தில் வசிக்கின்றனர்.

வட அமெரிக்காவின் ஜனத்தொகை 40 கோடி 10லட்சம்.

ஐரோப்பாவில் தான் ஜனத்தொகை அதிகரிப்பு குறைந்துள்ளது.

0.4 சதவீத அதிகரிப்பு அக்கண்டத்தில் கடந்த ஆண்டு காணப்பட்டது. ஐரோப்பியக் கண்டத்தின் 1985 ஜனத்தொகை 49 கோடி 20லட்சம் என்று கணக்கிடப்பட்டுள்ளது.

## 510 சட்டவிரோத துப்பாக்கிகள் 1985இல் சிக்கின

புதுடில்லி, ஜன. 5

லைசென்ஸ் பெறாத உள்ளூரில் தயாரிக்கப்பட்டதாகக் கூறப்படும் 510 துப்பாக்கிகள் புதுடில்லியில் 1985இல் கைப்பற்றப்பட்டன.

1984இல் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களிலும் பார்க்க இது இரட்டிப்பு மடங்காகும்.

உத்தரப் பிரதேசத்தில் இருந்து கள்ளத்தனமாக இந்த ஆயுதங்கள் வருவதைக் கட்டுப்படுத்த முடியாமல் உள்ளதாகப் பொலீஸார் கூறுகின்றனர்.

## அளவெட்டி தெற்கில் 7பேருக்கு புற்றுநோய் அறிகுறி

### ஆய்வின்போது கண்டுபிடிப்பு

காங்கேசன்துறை, ஜன 6

அளவெட்டி தெற்கு கிராமம் ஒன்றில் மேற்கொள்ளப்பட்ட நோய்கள் குறித்த ஆய்வு ஒன்றின்போது ஏழுபேருக்கு புற்றுநோயின் ஆரம்ப அறிகுறிகளும், மூன்று பேருக்கு சயரோக நோயும் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

அளவெட்டி தெற்கு தம்பளாவத்தை என்னும் கிராமத்திலேயே இந்த ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அப்பகுதி சுகாதார பரிசோதகர் திரு வீ. க. சிங்கராஜா, மருத்துவ மாது திருமதி. மகாலிங்கம் ஆகியோர் சுகாதார நலதொண்டர்களின் உதவியுடன் இந்த ஆய்வை நடத்தினர்.

கிராம பொதுமக்களில் 65பேர் புற்றுநோய் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 7 பேருக்கு அந்நோயின் ஆரம்ப அறிகுறிகள் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

மேலும் 33 பேர் சயரோகநோய் குறித்த ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டு 3பேருக்கு அந்நோய் இருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

இவர்களுக்கு தகுந்த வைத்திய சிகிச்சைகளை பெற்றுக் கொள்ளுமாறு ஆலோசனையும் வழங்கப்பட்டது.

இவ்வாறான ஆய்வை தொடர்ந்தும் பல கிராமங்களில் மேற்கொள்ள ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## 50 சதவீத சம்பள அதிகரிப்பு கோருகிறது தொழிற் சங்கம்

யாழ்ப்பாணம், ஜன. 6

சகலதுறை ஊழியர்களுக்கும் ஐம்பது சதவீத சம்பள அதிகரிப்பு வழங்குமாறு இலங்கை தொழிற்சங்க சம்மேளனம் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

சகல ஊழியர்களுக்கும் ஆகக் குறைந்த மாதச் சம்பளமாக ஆயிரம்ரூபா வழங்க வேண்டும் என்பதும், ஒவ்வொரு வாழ்க்கைச்செலவு அலகுக்கும் ஐந்து ரூபா கொடுக்கப்பட வேண்டும் என்பதும் இவர்களின் கோரிக்கை ஆகும்.

இச்சம்மேளனம் அரசுக்குச் சமர்ப்பித்துள்ள மகஜரில் பின்வருமாறு காணப்படுகிறது:-

அரசு கணித்துள்ள ஆகக் குறைந்த சராசரி மாத வருமானத்துக்குக் குறைவான ஊதியத்தையே இன்று உற்பத்தித்துறையில் ஈடுபட்டுள்ள ஊழியர்களில் 65 சதவீதமானோர் பெறுகின்றார்கள்.

ஊழியரின் மாதாந்த சராசரி வருமானம் 700 ரூபா மட்டுமே என்று அரசாங்கம் கணித்துள்ளது.

இருப்பினும் அரசு அமைத்த 36 சம்பள நிர்ணய சபைகளில் 25 சபைகள் ஊழியர்களுக்கு 700 ரூபாவுக்குக் குறைவாகவே சம்பளம் வழங்குமாறு சிபாரிசு செய்துள்ளன.

மத்திய வங்கிஅண்மையில் வெளியிட்டுள்ள தகவலில் இந்த நிலை விளக்கப்பட்டுள்ளது.

நகர்ப்புற ஊழியர்களில் 55 சதவீதமானோரும், கிராமிய ஊழியர்களில் 67 2 சதவீதமானோரும், தோட்டத்துறை ஊழியர்களில் 95 9 சதவீதமானோரும் ஆயிரம் ரூபாவுக்கு குறைவான மாதவருமானம் பெறுகின்றார்கள் என்பது மத்திய வங்கியின் கணிப்பு ஆகும். இவ்வாறு அம்மகஜரில் கூறப்பட்டுள்ளது.

# மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு

## தட்டுப்பாடு காரணமாக கோட்டாமுறை அமுல்

### யாழ் உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி விளக்கம்

யாழ்ப்பாணம், ஜன 6

தட்டுப்பாடு காரணமாகத்தான் உணவுப் பொருள்கள் கோட்டா முறையில் விநியோகிக்கப்படுகின்றன.

உணவுப் பொருள்கள் தட்டுப்பாடு விரைவில் நீங்கிவிடும். அதைத் தொடர்ந்து கோட்டா முறை நீக்கப்படும்.

இப்படிச் சொன்னார், யாழ். மாவட்ட உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு. எஸ். பற்குணம்.

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்குக் குறைந்த அளவு உணவுப் பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டது குறித்து சங்கம் செய்துள்ள முறைப்பாடுபற்றி 'உதயன்' கேட்டபோதே உதவி உணவுக் கட்டுப்பாட்டதிகாரி திரு பற்குணம் இத்தகவலை வெளியிட்டார்.

விரைவில் அரிசி, மா போதியளவு வந்து சேரவுள்ளன. அதைத் தொடர்ந்து கோட்டா முறை நீக்கப்பட்டுவிடும்.

சுன்னாகம், நல்லூர், தெல்லிப்பழை கூட்டுறவுச் சங்கங்களுக்கே கோட்டா முறையின்கீழ் கூடுதல் உணவுப் பொருள் வழங்கப்படுகின்றன.

தட்டுப்பாடு ஏற்படும் சமயம் கோட்டா முறையின்கீழ் உணவுப்பொருள்கள் விநியோகிக்கப்படும் —

இப்படி திரு. பற்குணம் சொன்னார்.

## சாவகச்சேரியில் 4 ஆட்டிறைச்சி கடைகள்

சாவகச்சேரி, ஜன. 6

கடந்த ஆண்டு, இரண்டாகி பின்பு ஒன்றாகி கடைசிப் பகுதியில் ஒன்றுமே இல்லாத நிலைக்கு வந்த சாவகச்சேரி ஆட்டிறைச்சிக்கடை விவகாரம் இவ்வாண்டு நான்கு கடைகளுக்கு வழிவகுத்து விட்டது.

கேள்வி மூலம் நகர சபை நான்கு கடைகளுக்கு அனுமதி வழங்கி உள்ளது.

இந்தக் கடைகள் இவ்வாரம் விற்பனையை ஆரம்பிக்கும்.

## ரயில் சேவையை கோட்டை வரை நீடிக்க கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்-மருதானை ரயில் சேவையை, யாழ்-கோட்டை வரை நீடிக்க வேண்டும் என்று தமிழர் கலாசாரச் சங்கம் போக்குவரத்து அமைச்சரைக் கேட்டுள்ளது.

சங்கத் தலைவரும் சட்டத்தரணியுமான திரு. எஸ். கே. மகேந்திரன் இது சம்பந்தமாக போக்குவரத்து அமைச்சருக்கு மகஜர் ஒன்றைச் சமர்ப்பித்து உள்ளார்.

யாழ்ப்பாணம் ரயில் சேவை மருதானையோடு நிறுத்தப்படுகின்றது.

மருதானை ரயில் நிலையச் சுற்றுடல் பகல் நேரங்களிலேயே பிக்பொக்கட்டுக்குப் பேர் போனது. அதுவும் இரவு நேரம் என்றால் சொல்ல வேண்டியது இல்லை.

யாழ்நகரில் இருந்து செல்லும் பிரயாணிகள் இரவு நேரத்தில் மருதானையை அடைந்து உடைமைகளை இழந்து தவிக்க வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

தமிழ் பேசும் இளைஞர் படும் தொந்தரவும் சொல்ல முடியாது உள்ளது.

யாழ் மக்களின் வேதனையை அதிகரிக்காமல் இருக்க, ரயில் சேவையை கோட்டை வரை நீடிக்க வேண்டும்.

இது யாழ்ரயில் பயணிகளுக்குப் பெரும் உதவியாக இருக்கும்.

இப்படி சட்டத்தரணி திரு. மகேந்திரன் தனது மகஜரில் கூறியுள்ளார்.

## யாழ் மாநகர சபை புதிய அலுவலக மாதிரி அமைப்பு

யாழ்ப்பாணம், ஜன. 6

யாழ்ப்பாணம் மாநகர சபையின் புதிய அலுவலகக் கட்டடம் பற்றிய மாதிரி அமைப்பு நல்லூர் இந்து ஷ்டுதி மண்டபத்தில் பொது மக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது.

இம் மாதிரி அமைப்பைக் கட்டடக் கலைஞர் [illegible] தயாரித்து உள்ளார். உத்தேச அலுவலகம்

நல்லூர் முத்திரைச் சந்திக்கு அருகில் பருத்தித்துறை வீதிக்கும் சங்கிலியன் வீதிக்கும் இடையில் உள்ள நல்லூர் கந்தசுவாமி ஆலயத்துக்குச் சொந்தமான 10 ஏக்கர் காணியில் அமைய உள்ளது. மாநகரசபையின் சகல திணைக்களங்களையும் உள்ளடக்கிய [illegible] அலுவலகம் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## வடமாகாண மீனவர் குடும்பங்களுக்கு உணவு முத்திரை?

யாழ்ப்பாணம், ஜன. 6

வடமாகாணக் கரையோரப் பகுதிகளில் வாழும் மீனவர்களுக்கும் புதிய ஆண்டில் உணவு முத்திரை வழங்கப்படும் சாத்தியக்கூறு உண்டு.

உணவுக் கட்டுப்பாட்டுத் திணைக்கள வட்டாரம் உதயனுக்கு இத் தகவலைத் தெரிவித்தது.

இக்கரையோரப் பகுதி தடைசெய்யப்பட்ட பிரதேசமாகப் பிரகடனஞ் செய்யப்பட்டது.

இதனைத் தொடர்ந்து இப்பகுதி விவசாயிகள் தொழில் வாய்ப்பை இழந்தனர்.

இவர்களுக்கே உணவு முத்திரை வழங்கப்பட உள்ளது.

இதனால் சுமார் பதின்மூன்று ஆயிரம் மீனவர் குடும்பங்கள் பலன் அடையும்.

### உபகரணங்கள்

வட்டுக்கோட்டை, ஜன. 6

யாழ். கல்வித் திணைக்கள நலன்புரிச் சங்கம் தமதுஅங்கத்தவர்களுக்கு மிகக் குறைந்த விலையில் பாடசாலைப் பிள்ளைகளுக்கான உபகரணங்களை வழங்கியுள்ளது.

## யாழ் ஆஸ்பத்திரிக்கு 5மாடி கட்டடம்

திருநெல்வேலி, ஜன 6

யாழ் அரசினர் ஆஸ்பத்திரியில், புதியதாக ஐந்து மாடிக் கட்டடம் ஒன்று விரைவில் அமைக்கப்படவிருக்கின்றது.

இக் கட்டடத்தைக் கட்டுவதற்கான ஒப்பந்தம் ஒன்று மேற்படி ஆஸ்பத்திரி பணிப்பாளர் டாக்டர் நச்சினார்க்கினியன் முன்னிலையில் கைச்சாத்திடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதய சங்கற்பம்**

ஒருவன் சமூக, அரசியல் சுதந்திரத்தைப் பெறலாம். ஆனால் அவன் ஆசை, அவாவுக்கு அடிமையாக இருக்கும் வரை உண்மையான சுதந்திரத்தின் இன்பத்தை அனுபவிக்க முடியாது.

—சுவாமி விவேகானந்தர்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
06-01-86 த. பெ. 23

## ஊர் தோறும் நடமாடும் இரத்த வங்கிகள் தேவை

யாழ்ப்பாணம் பெரியாஸ்பத்திரி இரத்த வங்கியில் கடந்த வெள்ளிக்கிழமை 15 பைந்து இரத்தம் மட்டுமே கையிருப்பில் இருந்தது.

இந்தச் செய்தியைச் சனிக்கிழமை உதயனில் படித்ததும் நாட்டுப்பற்று உள்ள எவருக்கும் அதிர்ச்சி ஏற்பட்டிருக்கும்!

யாழ்ப்பாணக் குடாநாட்டின் சனத்தொகை மட்டும் சுமார் பதினொரு லட்சம். வேறு தமிழ் மாவட்டங்களில் இருந்து அகதிகளாக வந்தவர்களின் தற்காலிக தாயகம் யாழ்ப்பாணம் தான். கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களுக்குப் பிரதான ஆஸ்பத்திரியாக விளங்குவதும் யாழ்ப்பாண ஆஸ்பத்திரியே.

ஆகக் குறைந்தது 20 லட்சம் மக்களுக்குச் சிகிச்சை அளிக்கும் ஓர் ஆஸ்பத்திரியில் 15 பைந்து இரத்தம் எம்மாத்திரம்? உயிராபத்து உள்ள ஒரு நோயாளிக்கே திடீரென 2, 3 பைந்து இரத்தம் தேவைப்படலாம். அவசர சத்திர சிகிச்சை ஒன்றுக்கு அதனைவிட அதிகமாகவும் தேவைப்படலாம்.

சனிக்கிழமை யாழ்நகரில் இடம்பெற்ற சம்பவம்போல நடக்குமானால் பலருக்கு ஒரே நேரத்தில் சத்திர சிகிச்சை செய்ய நூற்றுக்கணக்கான பைந்து இரத்தம் தேவைப்படக்கூடும். சொல்லி வைத்தாற்போல் சனிக்கிழமைச் சூட்டுச் சம்பவத்தில் 14,15 பேருக்கு அவசர சிகிச்சை அளிக்க வேண்டியதாயிற்று.

வங்கியில் இருந்த இரத்தம் போதவில்லை. இரக்க சிந்தையுள்ள இளைஞர்களும் பொது மக்கள் சிலரும் உடனே இரத்ததானம் செய்ததால் பல உயிர்களைக் காப்பாற்ற முடிந்தது.

வெள்ளம் வந்த பின்னர் அணைகட்டுவது போல, நோயாளி ஆஸ்பத்திரிக்கு வந்த பின்னர் இரத்தத்துக்கு ஓடித் திரிய முடியுமா? இந்த நிலை நீடித்தால் பல தமிழர்களின் உயிரை நாமே சாகடிப்பதாக முடியும்.

பயங்கரவாத ஒழிப்பு என்ற பேரில் கட்டாக்காலி ஆடு, மாடுகளைச் சுட்டுக் கொல்வது போல் பாதுகாப்புப் படையினர் தமிழ் மக்களை அழித்து வருகிறார்கள். அந்த எண்ணிக்கையை மேலும் அதிகரிப்பதற்கு யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரியும் உடந்தையாலதா?

மருந்தை, வைத்திய உபகரணங்களை, பிறவற்றைக் கடையில் பணத்தைக் கொடுத்தாவது வாங்கலாம். இரத்தத்தை அவ்வாறு வாங்கும் வசதி இன்னும் இங்கு ஏற்படவில்லை.

இரத்ததானம் செய்யுமாறு ஒருவரை வற்புறுத்த முடியாது. பலவந்தமாக அவரிடம் இருந்து இரத்தத்தை எடுக்கவும் முடியாது.

மற்றவர் உயிர்காக்க இரத்ததானம் செய்ய வேண்டும் என்ற இரக்க சிந்தை ஒவ்வொருவருக்கும் உண்டாக வேண்டும். சாதாரணமாக, திடகாத்திரம் உள்ள ஒருவர் இரத்ததானம் செய்வதால் அவருக்குத் தீங்கு எதுவும் ஏற்படாது. அவரது தேகசுகம் பாதிக்கப்பட மாட்டாது. இரத்ததானம் செய்யாமல் இருப்பதால் தான் பலருக்கு பலவிதமான ஆபத்தான வியாதிகள் உண்டாகின்றன.

யாழ்ப்பாணத்தவர் படித்த சமூகம் என மதிக்கப்படுவது உண்டு. அப்படியிருக்க இரத்ததானம் செய்யப் பின்னின்றால் அது கேலிக்கிடம் இல்லையா? நாம் எல்லா வகையாலும் கஞ்சர்கள் என்று மற்றவர் சொல்ல இடமளிக்கக் கூடாது. நாமும் எமது உறவும் என்ற குறுகிய வட்டத்திலிருந்து தமிழர் சமூகம், ஊரும் இனமும் என்ற சற்றுப் பரந்த வட்டத்திற்காவது நகருவது அவசியம்.

இப்போதிருப்பதை விட தமிழ்ப் பகுதிகளின் இரத்தத் தேவை இனிவரும் நாட்களில் மேலும் அதிகரிக்க இடமுண்டு.

கிராமங்களில் நடமாடும் இரத்த வங்கிகளைக் கொண்டு சென்று இரத்ததான இயக்கத்தை ஆரம்பிக்க வேண்டும். சமூக இயக்கங்கள் இதனைச் செயற்படுத்தலாம்.

எமது உடன் பிறப்புகளைக் காப்பாற்றும் பொறுப்பு எங்களிடமே என்ற உணர்வு பிறக்கவேண்டும். அப்போது இரத்ததானம் சிரமமான காரியமாக இருக்காது.

### கலைக்கதிர் சனசமூக நிலையம்

யாழ்ப்பாணம், ஜன. 6

வளலாய் கலைக்கதிர் சனசமூக நிலையம் வருடாந்த பொதுக்கூட்டம் அண்மையில் நடைபெற்றது.

திரு. து. சிவபாதம் தலைமை வகித்தார்.

புதிய நிர்வாகிகள் விவரம் வருமாறு:

தலைவர்: எஸ். நவரத்தினம், செயலாளர்: மா.பஞ்சலோகேஸ்வரன், பொருளாளர்: சி. கந்தசாமி, செயற்குழு: க இளங்கோ, அ. கேதீஸ்வரன், தி. பகீரதன், மா. குணசேகரம், ஐ ஜெயராசா, பொ பத்மநாதன். காப்பாளராக திரு. க. ஜெயபாலசிங்கம் (விரிவுரையாளர், பேராதனைப் பல்கலைக்கழகம்) தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இதைவிட 9 பேர் கொண்ட ஆலோசனைக் குழுவும் அமைக்கப்பட்டது.

# விளைச்சலுக்கு ஏற்றதான விலை விவசாயிகளுக்கு வேண்டும்

## இதுவே யாழ்ப்பாணம் எதிர்நோக்கும் பிரச்சினை

கடின உழைப்பினால் புகழ்தேடிய யாழ்ப்பாண விவசாயி இன்று முகம் கொடுக்கும் பிரச்சினைகள் ஒன்றா இரண்டா?

நாட்டில் நிலவும் நெருக்கடி நிலைமை காரணமாக மிகவும் பாதிப்புறுபவன் விவசாயியே.

அரச, தனியார் துறை, கூட்டுத்தாபன ஊழியர்கள் மாத வருமானம் பெறுபவர்கள்.

எனவே அவர்களிலும் பார்க்க விவசாயியையே இந்த நிலைமை அதிகமாக பாதிக்கிறது.

இந்த நிலையில் அவனுக்கு ஏற்படும் ஏனைய பிரச்சினைகள் அநேகம்.

நடப்பாண்டுக்கு உரிய யாழ்ப்பாண மாவட்ட விவசாய செயற்படு திட்டத்தை யாழ் செயலகம் தயாரித்து உள்ளது.

இத்திட்டத்துக்கு யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம் கொடுத்துள்ள அணிந்துரையில் விவசாயத்துறையில் கடந்த ஆண்டு ஏற்பட்ட வீழ்ச்சி பற்றிக் கவலை தெரிவித்து உள்ளார்.

1983 ஆம் ஆண்டில் அக்டோபர் தொடக்கம் டிசம்பர் வரைக்கும் 1400 மெட்ரிக் தொன் விதை உருளைக்கிழங்கு கமக்காரர்களுக்கு வழங்கப்பட்டது.

அவற்றை யாழ் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர்கள் 720 ஹெக்டர் நிலத்தில் பயிர் செய்தனர். இவற்றுள் 353 ஹெக்டர் நிலத்தில் நடைபெற்ற உருளைக்கிழங்குச் செய்கை நோயினால் பாதிப்பு அடைந்து அழிவுற்றது. சுமார் ஐம்பது வீதச் செய்கை நாசமடைந்தது. இதனால் இவ் விவசாயிகளுக்கு எத்துணை பொருளாதார நஷ்டம் ஏற்பட்டது.

பல பரிசோதனைகளை நடத்திய பின்னர் தருவிக்கப்பட்ட விதை உருளைக்கிழங்கில் கிருமிகளின் தாக்கம் இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இதனாலே உண்மையில் பாதிப்பு விவசாயிக்குத் தான்.

எனவே சம்பந்தப்பட்ட அதிகாரிகள் வருங்காலத்தில் தருவிக்கப்படும் விதை பொருள்களைப் பரிசோதனை செய்தல் வேண்டும். நோய்க் கிருமித் தாக்கம் இல்லை என்பதை உறுதிப்படுத்துவது அவசியம். அதன் பின்னரே விவசாயிகளுக்கு அவை வழங்கப்பட வேண்டும்.

**வே. வரதசுந்தரம்**

1984/85 ஆம் வருடங்களிலும் உருளைக்கிழங்கு உற்பத்தியில் இங்கு வீழ்ச்சி ஏற்பட்டது.

அடிக்கடி வரும் வெள்ளத்தினாலும் விவசாயி பாதிப்பு அடைகிறான். அண்மையிலே தொடர்ச்சியாகப் பெய்த பெருமழை காரணமாக இங்கு வெள்ளம் ஏற்பட்டது.

19 நாட்களாக யாழ்ப்பாண மாவட்டத்தில் 1052 மில்லி மீட்டர் மழை பெய்தது. இப்படி முந்திய ஆண்டிலும் வெள்ளம் ஏற்பட்டது.

1984 இல் பெருமழை காரணமாக வெங்காயச் செய்கையும் முற்றாக அழிந்தது. சென்றாண்டு நவம்பர் நடுப்பகுதியிற் பெய்த பெருமழை காரணமாக 8500 ஏக்கர் நெற்செய்கை முற்றாக நாசம் அடைந்தது. மேலும் 4600 ஏக்கர் நெற்செய்கை ஓரளவு பாதிக்கப்பட்டது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் செய்கை பண்ணப்படும் பிரதான பயிர் மிளகாய். மிளகாய் பயிரிடல் டிசம்பரில் ஆரம்பித்து ஆவணி மாதம் வரை தொடரும். இங்கு சுமார் 2500 தொட்டு 3500 ஹெக்டர் வரை மிளகாய் பயிரிடப்படுகிறது.

விவசாயிகளின் கோரிக்கையை தொடர்ந்து அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்தின் முயற்சியினால் மிளகாய் செய்கைக்குக் காப்புறுதித் திட்டம் தயாராகி உள்ளது.

''மழை, வெள்ளம், நோய் காரணமாக மிளகாய் செய்கையில் ஏற்படும் நஷ்டத்தை விவசாயி ஈடு செய்ய இக் காப்புறுதித் திட்டம் உதவும்'' என்று யாழ்ப்பாண மாவட்ட காணிப் பிரிவுக்குப் பொறுப்பாயுள்ள உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ். பி. பாலசிங்கம் விளக்கினார். அவர் தந்த ஏனைய தகவல்கள் வருமாறு:-

இம் மிளகாய் செய்கைக்கான காப்புறுதி ஐந்து மாதங்களுக்குச் செலலுபடியாகும். மார்ச் மாதம் முதலாம் திகதி தொடக்கம் ஜூலைமாதம் முடியும் வரையிலான காலப்பகுதியில் காப்புறுதி வலுவுடையதாக இருக்கும்.

மிளகாய் பயிர் வளரும், பூக்கும், விளைச்சல் தரும் இக்காலப்பகுதிக்கு இக் காப்புறுதி மிகவும் ஏற்புடையதே - என்றும் திரு. பாலசிங்கம் விளக்கம் அளித்தார்.

விவசாய செய்கையில் மையமாக விளங்குபவன் விவசாயிதான். எனவே அவனது கருத்துக்களையும் இங்கு பிரதிபலிக்க விரும்புகிறோம்.

உழவனின் தனி முயற்சி அல்ல விவசாயம். அனைவரின் பங்களிப்பும் அவசியம். விவசாயச் செயற்பாட்டுடன் தொடர்புள்ள திணைக்களங்கள், சபைகள் ஆகியவற்றின் எண்ணிக்கையோ மிகப் பல.

இவற்றுக்குப் பொறுப்பாக உள்ள அதிகாரிகள், பிரச்சினைகள், தட்டுப்பாடு ஏற்பட்ட பின்னர் இவற்றைக் களையப் பகீரத முயற்சி மேற்கொள்ளும் அணுகுமுறையை ஒழித்து, முன்கூட்டியே திட்டமிட்டு வெள்ளம் வருமுன்னர் அணை கட்ட வேண்டும்.

இவ்வாறு அவர்கள் காத்திரமான பங்களிப்பைச் செய்தல் வேண்டும்.

விவசாயி சிந்தும் வியர்வைக்கு ஏற்ப விளைச்சலைப் பெறவேண்டும்.

அவ் விளைச்சலுக்கு உரிய விலையும் அவனுக்கு கிடைக்க வேண்டும்.

சமூகம் அதனை உறுதி செய்யவேண்டும்.

**10 லட்சம் வீடமைப்புத் திட்டம்**

## வவுனியா, முல்லைத்தீவு மாவட்டங்கள் 2 ஆம் இடம்

யாழ்ப்பாணம், ஜன. 6

பத்துலட்சம் வீடமைப்புத் திட்டச் செயற்படுத்துவதில் வவுனியா—முல்லைத்தீவு மாவட்டங்கள் அகில இலங்கையிலேயே இரண்டாம் இடத்தை வகிக்கின்றன.

மாங்குளம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபை இது குறித்து பெருமிதம் அடையலாம்.

இப்படி வீடமைப்பு அதிகார சபை மாவட்ட முகாமையாளர் திரு.எஸ் சாந்தலிங்கம் சொன்னார்.

மாங்குளம் தேசிய வீடமைப்பு அதிகார சபை நலன்புரிச் சங்கத்தினர் யாழ். ஞானம்ஸ் ஹோட்டல் விழா மண்டபத்தில் வருட இறுதிக் கொண்டாட்ட நிகழ்ச்சியை நடத்தினர்.

அதில் கலந்துகொண்டு பேசுகையில் திரு. சாந்தலிங்கம் இப்படிச் சொன்னார்.

சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட முகாமையாளர் திரு. வே. ஸ்ரீஸ்கந்தவேல் கலந்து கொண்டார்.

வீடமைப்பு அபிவிருத்தியைப் பொறுத்த அளவில் தமிழ் மாவட்டங்களில் முதலாம் இடத்தை மாங்குளம் அலுவலகம் பெற்றுள்ளது. – இப்படியாக திரு ஸ்ரீஸ்கந்தவேல் சொன்னார்.

இந்நிகழ்ச்சியுடன் இடமாற்றம் பெற்று யாழ் அலுவலகம் வந்துள்ள திரு. கு. உதயகுமாரன், செல்வி. இ. ரஜனி ஆகியோரின் சேவை நலன் பாராட்டும் இடம் பெற்றது.

நலன்புரிச் சங்கச் செயலாளர் திரு. து. மணிசேகரன் நன்றி சொன்னார்.


### கலைவாணி சனசமூக நிலைய புதிய மண்டபம்

சாவகச்சேரி, ஜன 6

வாணி இயற்றலை கலைவாணி சனசமூக நிலைய புதிய மண்டபத்தைச் சாவகச்சேரி உதவி அரசஅதிபர் திரு. க. துரைராசா திறந்து வைத்தார்.

சமூகத் தொண்டர் திரு வ. முருகேசுவினால் அன்பளிப்பாக வழங்கப்பட்ட காணியில் இப் புதிய மண்டபம் அமைக்கப்பட்டது.

தலைவர் திரு. எஸ். கந்தையா தலைமையில் நடைபெற்ற இத் திறப்பு விழா வைபவத்தில் வரணி மகாவித்தியாலய அதிபர் திரு. வல்லிபுரமும் கலந்து கொண்டார்.



**பொய்யாமொழி**

குறள்:

இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்
நல்லாற்றின் நின்ற துணை.

பொருள்:

இல்லறத்தில் வாழ்பவனாகச் சொல்லப்படுகின்றவன் அறத்தின் இயல்பை உடைய மூவர்க்கும் நல்வழியில் நிலைபெற்ற துணையாவான்.

# கண்காணிப்பு குழு விஜயத்தின் பின் மட்டக்களப்பில் 40 பேர் பலி

## விசாரணை நடைபெறுதது குறித்து மக்கள், பிரஜைகள் குழுவினர் கவலை

மட்டக்களப்பு, ஜன. 6

மட்டக்களப்புச் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் இரு தடவைகள் விஜயம் செய்து விசாரணைகளை நடத்திய போதிலும் அதற்குப் பின்னர் நடைபெற்ற சம்பவங்கள் தொடர்பான விசாரணைகளை இதுவரை மேற்கொள்ளவில்லை. இது குறித்து பாதிக்கப்பட்ட மக்களும் பிரஜைகள் குழுவினரும் கவலை தெரிவிக்கின்றனர்.

கண்காணிப்புக் குழுவினர் நவம்பர் மாதம் 13ஆம் திகதி முதலாவது விஜயத்தை மேற்கொண்டனர்.

இவ் விஜயத்தின் பின் 20ஆம் திகதி பார்வீதி சம்பவத்தை அடுத்து மீண்டும் திடீர் விஜயம் மேற்கொண்டு விசாரணை நடத்தினர்.

மேற்படி விஜயத்தின் பின்பு நடைபெற்ற யுத்த நிறுத்த மீறல்களில் சுமார் 40 பேர் வரை ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் பலியாகியுள்ளனர். இது குழுவின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

நவம்பர் 23ஆம் திகதி ஒந்தாச்சி மடம் கண்ணி வெடி விபத்தை அடுத்து [illegible] சடலங்கள் படையின[illegible] பட்டன. சில வீடுகளில் உடைமைகள் சேதமாக்கப்பட்டன.

நவம்பர் 28ஆம் திகதி மண்டூரில் ஹெலிக்கொப்டர் துப்பாக்கிப் பிரயோகத்தில் 24 பேர் இறந்தனர். கரை ஒதுங்கிய 19 சடலங்களை பொதுமக்கள் அடக்கம் செய்தனர். சில. வீடுகள் தீககிரையாகின.

டிசம்பர் 1ஆம் திகதி கல்லடி கிரனைட் வீச்சுச் சம்பவத்தில் ஒரு படைவீரர் பலியானார். மூவர் காயம் அடைந்தனர்.

ஆயுதப்படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பொதுமக்கள் பலியாகினர். சடலங்கள் உறவினரிடம் கையளிக்கப்பட்டன.

இதனைத் தவிர ஆயுதப் படையினரின் துப்பாக்கிப் பிரயோகத்தில் சித்தாண்டி, நாவற்குடா ஆகிய இடங்களிலும் சிலர் பலியாகி உள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இத்தகைய சம்பவங்கள் இடம்பெற்றபோதிலும் காண்காணிப்புக் குழு இதுவரை வருகை தரவில்லை எனப் பலரும் அங்கலாய்க்கிறார்கள்.

### சங்கானையில் ஆண்டுவிழாவும் இல்லவிளையாட்டும்

யாழ்ப்பாணம், ஜன.6

சங்கானை கிராம அபிவிருத்திச் சங்கத்தின் 9 ஆவது ஆண்டு விழாவும் இல்ல விளையாட்டுப் போட்டிகளும் ஜனவரி11 ஆம் திகதி பிற்பகல் நடைபெற உள்ளது.

சங்கானை உதவி அரசாங்க அதிபர் திரு. துவைத்திலிங்கம் பிரதம அதிதியாகக் கலந்து கொள்கின்றார்.

சிறப்பு விருந்தினர்களாக கிராமஅபிவிருத்தி அதிகாரி திருமதி பொன்மலர் சிவானந்தன், அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரி திரு. நா. குமாரசாமி, விளையாட்டு அதிகாரி திரு. கா. அரிச்சந்திரா, கிராம அபிவிருத்திச் சங்க முன்னாள் தலைவர் திரு. சி. க. கணேசன் ஆகியோர் கலந்து கொள்வர்.

## 5 நீர்ப்பாசன குளங்களின் அபிவிருத்திக்கு ரூபா 1 லட்சம்

யாழ்ப்பாணம், ஜன. 6

கிளிநொச்சி மாவட்டத்தில் ஐந்து சிறிய நீர்ப்பாசனக் குளங்களின் அபிவிருத்திக்கு புதிய ஆண்டில் ஒரு லட்சம் ரூபா செலவு செய்யப்படும்.

பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தின்கீழ் இந்த நிதி ஒதுக்கப்பட்டு உள்ளது இந்த தகவலை கமநல சேவைத் திணைக்[illegible] திரு. க. பரமநாதன் உதயனுக்குத் தெரிவித்தார்.

கனகபுரம்குளம், கந்தன்குளம், உருத்திரன் குளம், நீவில் குளம், நெடுங்குளம் ஆகிய ஐந்து குளங்களின் அபிவிருத்திக்கு இந்த நிதி பாவிக்கப்படும்.

இதனால் கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள சுமார் 250 ஏக்கர் நெற்காணி வளம் அடைவதுடன் அப்பகுதி விவசாயிகளும் பயனடைவர் என்று திரு. பரமநாதன் கருத்துத் தெரிவித்தார்.

## நல்லூர் கல்வி வள நிலையம் நடத்திய போட்டி முடிவுகள்

நல்லூர், ஜன. 6

நல்லூர் கல்விவள நிலையம் நடத்திய ஐந்தாம் ஆண்டு நிறைவு விழாப் போட்டிகளில் பரிசுபெறுவோர் விவரம் வருமாறு:

**கவிதைப் போட்டி**

கீழ்ப்பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வன். சோ. சு. பிரதீபன் (யாழ். இந்துக் கல்லூரி) 2 ஆம் பரிசு – செல்வி. வி விஜேஷராணி (யாழ் இந்து மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வன். த. புவனேந்திரன் (யாழ். இந்துக் கல்லூரி) 2 ஆம் பரிசு – செல்வி. க. அத்துவிதானந்தன் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வி. சு. துஷ்யந்தி (யாழ் இந்து மகளிர் கல்லூரி)

மேற்பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வி. லோ. மாதங்கி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 2 ஆம் பரிசு – செலவி. அ ஹம்சா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வன். சி. உதயராசன் (யாழ் இந்துக் கல்லூரி)

**சிறுகதைப் போட்டி**

கீழ்ப் பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வன். கு. கணேசகுமார் (யாழ். இந்துக் கல்லூரி) 2 ஆம் பரிசு – செல்வி. ஜே யாழினி (யாழ் இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வி. சு. வாசுகி (யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்)

மத்திய பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வி. பி. கிருபா (யாழ் இந்து மகளிர் கல்லூரி) 2 ஆம் பரிசு – செல்வன். ம. மணிவண்ணன் (யாழ். இந்துக் கல்லூரி 3 ஆம் பரிசு – செல்வி எஸ். கீதா (யாழ் இந்து மகளிர் கல்லூரி

மேற்பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வி. ச. ஆனந்தி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 2 ஆம் பரிசு – செல்வி. க. ஜன்சி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வன். சி. மகிந்தன் (யாழ். இந்துக் கல்லூரி)

**கட்டுரைப் போட்டி**

கீழ்ப் பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வன். பா. கேதீஸ்வரரூபன் (யாழ் இந்துக் கல்லூரி)

2 ஆம் பரிசு – செல்வி. ப. நாமகள் (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வி. தர்மினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

மத்திய பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வி. கு. ரேணுகா (யாழ். இந்து மகளிர் கல்லூரி) செல்வி. இ. இராஜினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

2 ஆம் பரிசு – செல்வன். க. சசிகரன் (யாழ். இந்துக் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வி. சி. சாந்தினி (நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாலயம்) செல்வி. இ மாலதி (நல்லூர் ஸ்தான சி. சி. த. க. பாடசாலை)

மேற் பிரிவு:

1 ஆம் பரிசு – செல்வன். த அருணகிரி (யாழ். இந்துக் கல்லூரி) 2 ஆம் பரிசு – செலவி. வி. நந்தினி (யாழ். இந்து மகளிர் கல்லூரி) 3 ஆம் பரிசு – செல்வி. இளமதி (யாழ். இந்து மகளிர் கல்லூரி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றியல்ஸ்
மானிப்பாய்
A|L - 1986
பொருளியல்: எஸ். வரதராஜன்
3 ஆவது பிரிவு ஆரம்பம்; 7-1-1986
மாலை 4 00 மணி

# உதயன்

06-01-1986

றியல்ஸ்
மானிப்பாய்
9, G.C.E. (O|L) 3 ஆவது பிரிவு
விஞ்ஞானம்: இரா. செல்வவடிவேல்
கணிதம்: ஆனந்தராஜா
வர்த்தகம்: திருமதி கஜேந்திரநாதன்
சமூக கல்வி: K. S. முத்துலிங்கம்
ஆங்கிலம்: செல்வரட்ணம்
தமிழ்: பிரபல ஆசிரியர்
ஆரம்பம்; 6—1—86 மாலை 4-00 மணி

இனப்பிரச்சினை

# இலங்கைக்கு இந்தியா இறுதி நிபந்தனை விதிக்க வற்புறுத்தல்

சென்னை, ஜன. 5

இலங்கைத் தமிழர் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இலங்கை ஜனாதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனவுக்கு இந்திய அரசு இறுதி நிபந்தனை விதிக்க வேண்டும்

இலங்கை அரசு அதற்கு தவறுமானால் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளைப் பெறுவதற்கு இந்தியா முழு ஏற்பாடுகளையும் செய்ய வேண்டும்.

இப்படி இந்திய அரசை வற்புறுத்தினார் லோக்தள் கட்சித் தலைவர்களில் ஒருவரான டாக்டர் சுப்பிரமணிய சுவாமி.

இவர் ஜனதா கட்சி ஆட்சியில் இருந்த போது அரசாங்கத்தில் முக்கிய சக்தியாக விளங்கியவர்.

ஈழத்தமிழர் பாதுகாப்பு இந்துஸ்தான் முன்னணியின் அமைப்பாளரான இவர் அமெரிக்க ஹவார்ட் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகக் கடமைபுரிகின்றார்.

டாக்டர் சுப்பிரமணிய சுவாமி மேலும் சொன்னதாவது:

ஒரு குறிப்பிட்ட காலத்தினுள் அர்த்தமுள்ள கூட்டாட்சி ஒன்றை அமைக்க இலங்கை ஜனாதிபதி ஜெயவர்த்தனவுக்கு இறுதி நிபந்தனையை இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி விதிக்க வேண்டும்.

அந்தக் காலக் கெடுவினுள் கூட்டாட்சியை அமைக்க இலங்கை அரசு தவறினால்,

இலங்கைத் தமிழருக்கு உதவ பிரதமர் ராஜீவ் காந்தி தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இப்படி டாக்டர் சுப்பிரமணிய சுவாமி செய்தியாளர்களிடம் சொன்னார்.

சனிக்கிழமைச் சம்பவம்:

## நால்வர் சடலங்கள் விசாரணை நடக்க முன் எடுத்துச் செல்லப்பட்டன

நல்லூர், ஜன. 6

சனிக்கிழமை சம்பவத்தில் மரணமான ஐவரில் நால்வரின் சடலங்கள் மரண விசாரணை எதுவும் நடக்க முன்னரேயே உறவினர்களால் யாழ் ஆஸ்பத்திரி பிரேத அறையில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு விட்டன

கருணைநாதன் சிவநாதன். வயது 24.
செயனம்மா நாகூர்பிச்சை. வயது 65.
நடராசா குணம் வயது 26.
ராயப்பு வெலிக்கியூலஸ். வயது 50. ஆகியோரது சடலங்களே எடுத்துச் செல்லப்பட்டவை ஆகும்.

இவர்களது மரண விசாரணையை நடத்தச் சென்ற மரணவிசாரணை அதிகாரியும், பிரேத பரிசோதனை அதிகாரியும் பிரேத அறையில் இவர்களது சடலங்கள் இல்லாததால் அதிர்ச்சியடைந்தனர்.

இறுதியாக கிடந்த ஐந்தாவது நபரான சென் பற்றிக்ஸ் வீதியைச் சேர்ந்த இராசு இராமச்சந்திரன். (வயது 27) என்பவரின் மரண விசாரணை மட்டுமே நேற்று நடைபெற்றது.

### புதிய கட்டடம்

நாகர்கோவில் ஜன. 6

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையின் புதிய இரண்டு மாடிக் கட்டடம் பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்பட்ட 5லட்சம் ரூபாவில் அமைக்கப்பட்டுவருகிறது

## விளையாட்டரங்கு

இந்திய -- ஆஸி மூன்றுவது டெஸ்ட்

## வெற்றி தோல்வியின்றி முடிவடைவது உறுதி

### துடுப்பாட்ட வீரர்களின் கையில் ஆட்டம்; பந்து வீச்சாளர்கள் சோபிக்கவில்லை

சிட்னி. ஜன. 6

இந்திய ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையில் சிட்னியில் நடைபெறும் மூன்றுவது டெஸ்ட் ஆட்டம் வெற்றி தோல்வி யின்றி முடிவடைவது பெரும்பாலும் உறுதியாகிவிட்டது.

இந்தியா இரண்டுநாள் துடுப்பைக்கொண்டுநடத்திய விளாசல்களை ஆஸி அணி நேற்று முன்தினமும் நேற்றும் தொடர்ந்து நடத்தியது

இந்த ஆட்டம் வெறுமனே துடுப்பாட்ட வீரர்களின் சாதனைக்கு ஒரு களமாக மட்டுமே அமைந்திருக்கிறது.

இந்த டெஸ்டில் இருதரப்பு பந்துவீச்சுகளும் புஸ்வாணமாகின. நான்குநாள் ஆட்டத்தில் இருதரப்பினரும் சேர்ந்து மொத்தம்எட்டுவிக்கெட்டுகளை மட்டும் வீழ்த்தினார்கள். ஆனால் துடுப்பாட்டவீரர்கள் மொத்தம் 947 ஓட்டங்களைக் குவித்துவிட்டார்கள்.

மூன்றும்நாள் ஆட்ட முடிவில் விக்கெட் இழப்பின்றி ஓட்டங்களைப் பெற்றிருந்த ஆஸி அணி நேற்று தொடர்ந்து துடுப்பெடுத்தாடியது.

நேற்றைய ஆட்டம் மழை காரணமாக ஒரு மணிநேரம் முன்னதாகவே நிறுத்தப்பட்ட போது ஆஸி அணி 4 விக்கெட்டுகளை இழந்து 347 ஓட்டங்களைப் பெற்றிருந்தது.

டேவிட் பூன் 131, ஜியோவ் மோர்ஸ் 92, கிரேக் ரிச்சி 14, வெயின் பிலிப்ஸ் 14 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

ஆஸி அணித் தலைவர் அலன்போர்டர் 64 ஓட்டங்களுடனும் கிரெயிக் மத்தியூஸ் 15 ஓட்டங்களுடனும் ஆடிக்கொண்டிருக்கிறார்கள்.

நேற்றைய ஆட்டத்தில் கபில்தேவ், ஷிவ்லால் யாதவ் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும், ரவி சாஸ்திரி 2விக்கெட்டுகளையும் வீழ்த்தினார்கள்.

இன்று ஒருநாள் ஆட்டம் இன்னும் பாக்கியாக இருக்கிறது.

இந்த ஒருநாள் ஆட்டத்தில்டெஸ்ட் போட்டி முழுமையாக முடிந்து வெற்றி தோல்வி நிர்ணயிக்கப்படுவதற்கு வாய்ப்புகள் ஏதும் இல்லை.

இந்த மூன்றுவதுஇறுதி டெஸ்டுடன் இந்த டெஸ்ட் தொடர் முடிவடைகிறது

ஏற்கனவே முதல் இரண்டு டெஸ்டுகளும் வெற்றி தோல்வியின்றி 'டிரா'வில் முடிவடைந்தது தெரிந்ததே.

### 150 விளையாட்டு ஆசிரியர்கள்

யாழ்ப்பாணம், ஜன.6

மேலும் 150 விளையாட்டு ஆசிரியர்கள் நியமிக்கப்பட உள்ளனர்.

இவர்களுக்கான நியமனப் பத்திரங்கள் இம்மாதம் வழங்கப்படும் என்று கல்வி அமைச்சு வட்டாரங்கள் கூறின.

இந்த நியமனங்களுடன், கிராமங்களில் நிலவும் விளையாட்டு ஆசிரியர்களுக்கான தட்டுப்பாடு நீங்கிவிடும் என்று அறிவிக்கப்படுகின்றது.

### இருவர் கைது

கிளிநொச்சி, ஜன. 6

கிளிநொச்சி மூன்றும் வாய்க்கால் பகுதியில் இரண்டு பேரை, சந்தேகத்தில் ஆயுதப்படையினர் கைது செய்தனர்.

கனகபுரப் பகுதியிலும் ஒரு இளைஞரை ஆயுதப் படையினர் கைது செய்தனர்.

அதன் பின்னர் கனகபுரம் வீதியில் ஆயுதப் படையினர் ரோந்து வந்தனர். ரோந்தின் பொழுது துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டே சென்றனர்.

தேடுதல் நடவடிக்கையை டிசம்பர் 31 நள்ளிரவு நடத்தியபோது இச்சம்பவங்கள் இடம் பெற்றன.

பிரார்த்தனை இயக்கம்:

## தொண்டா - ஜே. ஆர். பேச்சு நடக்கும்

கொழும்பு. ஜன. 6

இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின்பிரார்த்தனை இயக்கம்பற்றி அமைச்சர் தொண்டமானுடன் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தன பேச்சுக்கள் நடத்தவிருக்கிறார்.

அமைச்சர் தொண்டமான், ஜனவரி 10ஆம் திகதி இந்தியாவில் இருந்து திரும்புகின்றார். அதன் பின்னரே திரு. தொண்டமானுடன் ஜனாதிபதி பேச்சுவார்த்தை நடத்துவார். இதுபற்றி ஜனாதிபதி அமைச்சரவைக் கூட்டத்திலும் தெரிவித்தார்.

இத்தகவலை அமைச்சரவைப் பேச்சாளரும் ராஜாங்க அமைச்சருமான டாக்டர் ஆனந்த திஸ்ஸடி அல்விஸ் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்

### கிணற்றில் சடலம்

சாவகச்சேரி. ஜன. 6

புத்தூர் கனகம்புளியடி ரோட்டில் வண்ணாத்திப் பாலச் சுடலைக்கு உரிய கிணற்றில் அழுகிய நிலையில் ஒரு ஆணின் சடலம் காணப்பட்டது.

திடீர் மரண விசாரணை அதிகாரி தற்கொலை மரணம் எனத் தீர்ப்பளித்து பிரேதத்தை அடக்கம் செய்யும்படி உத்தரவிட்டார்.

### இலங்கையுடன ...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ஜனதாக் கட்சி மாநாட்டில நிறைவேற்றப்படும் தீர்மானம் திங்கட்கிழமை (இன்று) வெளியிடப்படும் என்று, மாநாட்டு அமைப்பாளர்கள் தெரிவித்தனர்.

### உறுபபினா...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விமானம் மூலம் கொழும்பு செல்வர்.

நேற்று இரவு குழு உறுப்பினர்கள கோட்டை முகாமில் தங்கினர்.

குழு உறுப்பினர்களில் ஒருவரான பேராசிரியர் கா. சிவத்தம்பி மாலை 6 மணியளவில் கோட்டையைவிட்டு வெளியேறி, கார் ஒன்றில் தமது வீடு சென்றார்.

மாலை 6.00 மணி அளவில் அரசாங்க அதிபர், பொதுசனத் தொடர்பு அதிகாரி திரு. த. குலசேகரம், கண்காணிப்புக் குழு உறுப்பினர் பேராசிரியர் கா. சிவத்தம்பி ஆகியோர் கோட்டை முகாமில் இருந்து நடந்தே வாடி வீட்டுக்கு வந்தனர்.

அங்கிருந்து வாசனங்களில் அவரவர் வீடு சென்றனர்.

யாழ்ப்பாணம் வந்த கண்காணிப்புக் குழுவிற்கு திரு. கொட்பிரே குணதிலக தலைமை வகித்தார். திரு. கே. சிவ [illegible] நாதன், பேராசிரியர் [illegible] பேர் வந்து இருந்தனர்.

### தரை, ஆகாயத் தாக்குதல்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

ளும் துப்பாக்கி வேட்டுகளும் கேட்கத் தொடங்கின.

சுமார் ஒரு மணித்தியாலம் வரை துப்பாக்கி வேட்டுகள் கேட்ட வண்ணம் இருந்தன.

இரு தரப்பினரும் சரமாரியாகச் சுடத் தொடங்கினர்.

#### ஹெலிக்கொப்டர் வந்தது

இதைத் தொடர்ந்து மாலை 5-15 மணி அளவில் கே. கே. எஸ். வீதி பலாலி வீதிப் பக்கமாக இருந்து, கறுப்பு வெள்ளை நிறத்திலான ஹெலிக்கொப்டர் ஒன்று வந்தது.

தட்டா தெருவுக்கு மேலே வந்ததும் ஹெலிக்கொப்டரில் இருந்து தரையை நோக்கி வேட்டுகள் தீர்க்கப்படத் தொடங்கின.

யாழ் பஸ் நிலையத்திற்கு மேலே ஹெலிக்கொப்டர் வந்ததும் அது தாழப் பறக்கத் தொடங்கியது. அதிலிருந்து வேட்டுகள் நாலாபுறமும் சீறிப் பாய்ந்தன. ஹெலிக்கொப்டரில் இருந்து குண்டுகளும் கீழே விழுந்து வெடித்தன.

#### ஹெலிக்கொப்டர் சேதம்

தரையில் இருந்து எழும்பிய வெடிச் சத்தத்துடன், ஹெலிக்கொப்டர் வேகமாக மேலே எழும்பி, கோட்டை முகாமுக்குச் சென்றது.

இந்த ஹெலிக்கொப்டர் சேதமடைந்ததாகப் பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

சில நிமிடங்களின் பின்னர் கோட்டை முகாமில் இருந்து மற்றொரு கறுப்பு நிற ஹெலிக்கொப்டர் ஒன்று மேலே பறந்து வந்து சுடத் தொடங்கியது

இதனைத் தொடர்ந்து கீழ் இருந்து மேல் நோக்கியும் வேட்டுகள் அடுத் [illegible] நாலாபுறமும் குண்டுகள் [illegible] பட்'' என அவை வெடிப்பதும் நகரைக் கலக்கியது.

இரு தரப்பினரும் சரமாரியாகச் சுடத் தொடங்கினர்.

கோட்டைப் பக்கமாக இருந்து ரொக்கற் லோஞ்சர்கள், பீரங்கிகள், மோட்டர்கள் ஆகியவற்றிலிருந்து வேட்டுகள், குண்டுகள் நகரை நோக்கி அடுத்தடுத்து வந்தன.

#### கட்டடங்கள் சேதம்

இத் தாக்குதல்களால் ஹட்டன் நாஷனல் வங்கிக் கிளைக்கு அருகில் இருக்கும் சில கட்டடங்கள் சேதம் அடைந்தன.

ஹெலிக்கொப்டரில் இருந்து வந்த சூடுகள் ஆஸ்பத்திரி மீதும் விழுந்தன. ஓடுகள் சிதறி சில பகுதிகள் சேதமடைந்தன.

ஹெலிக்கொப்டர் தாக்குதல்களினால் கந்தர் மடம், ஓட்டுமடம், தட்டாதெருச் சந்தி மற்றும் நகருக்கு அருகில் உள்ள பகுதிகளில் இருக்கும் வீடுகள் சிலவும் சேதமடைந்தன.

கோட்டைக்கு முன்னால் உள்ள தொலைத் தொடர்புத் திணைக்களக் கட்டடம், பிரதம தபால் நிலையக்கட்டடம், வீரசிங்கம் மண்டபம் எல்லாம், கோட்டையில் இருந்து வந்த துப்பாக்கி வேட்டுக்களால் சேதமடைந்தன.

#### படுத்துக் கிடந்து உயிர் தப்பினர்

தொலைத் தொடர்புத் திணைக்கள ஊழியர்கள், பிரதம தபால் நிலைய ஊழியர்கள் ஆகியோர் நிலத்தில் படுத்துக் கிடந்து உயிர்தப்பினர்.

துப்பாக்கிச் சூடுகளினால் வர்த்தக நிலையங்கள் சிலவற்றுக்கும் சேதம் ஏற்பட்டன.

நேற்று மாலை 6. 30 மணிக்குப் பின்னரும் அடிக்கடி கோட்டைப் பக்கத்தில் இருந்து துப்பாக்கிச் சூடுகள் வந்த வண்ணம் இருந்தன.

### காயமடைந்தவர்கள் பெயர்....

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

காயம்.

9. இராசதுரை செல்வநாயகம் வயது 23. வசாவிளான்வாசி.
10. எஸ். சிவலோகநாதன் வயது 23. அச்சுவேலிவாசி.
11. மகாலிங்கம் ஆனந்தன் வயது 25 கிளிநொச்சிவாசி வர்த்தகர்.
12. எஸ். வி. முருகேசு வயது 38.
13. பெருமாள் செல்வராசா வயது 22. கை, காலில் சூட்டுக்காயங்கள்.
14. திருநாவுக்கரசு ராஜ்மோகன வயது 20. புங்குடுதீவு வாசி.
15. விஜயரட்ணம்ரவீந்திரன் வயது 19. கட்டப்பிராய்.
16. பி.சிறிகாந்த் வயது 17. ஓட்டுமடம் வாசி. மாணவன்.
17. க. பார்த்திபன் வயது 17. யாழ்ப்பாண வாசி.
18. எஸ் .பாலேந்திரன், வயது 17. யாழ்ப்பாணம் வாசி.
19. எஸ்.செல்லத்துரை வயது 21. நல்லூர் செட்டித்தெரு வாசி.
20. விவேகானந்தா மகேசன் வயது 14. கொய்யாத் தோட்டம் வாசி.
21 பொன்னையா சதானந்தமூர்த்தி வயது 30. வேலணை வாசி.
22 அழகர்நாகேந்திரன் வயது 21. யாழ் வாசி. காலில் சூட்டுக்காயம்.
23. ஞானசுந்தரம் நாகேஸ்வரன் வயது 15.
24. தம்பிராசா சந்திரகுமார் வயது 18. நாச்சிமார்கோவிலடி வாசி. தச்சுத் தொழிலாளி.
25 மிஸ்கின சாகிபுநசீர் வயது 24. முஸ்லிம் கல்லூரி வீதி. தையல் தொழில் செல்பவர்.
26. வீரசிங்கம் சிறிதரன், வயது 23. பெருமாள் கோவிலடி வாசி.
27 சுப்பையாசிவலோகநாதன், வயது 23. அச்சுவேலி வாசி.
28. சாத்தாவு செட்டியார் இளங்கோ, வயது21 யாழ்ப்பாணம்.
29. கணநாதன், வயது 24. அத்தியடி வாசி.
30. நாதன்சின்னராசா, வயது 32. ஓட்டுமடம் வாசி.
31. பக்கீர்முகிதீன் நவாமில். வயது 14. யாழ். மூர் வீதி வாசி.
32. உதவி சுங்ககலக்டர் செ. கணேஷ், யாழ்ப்பாணம்.
33 சுப்பிரமணியம் செல்வரத்தினம், வயது 48 புங்குடுதீவு வாசி.
34. அல்போன்ஸ்சுரேஷ் வயது 19. குருநகர்வாசி. மேசன் தொழில் செய்பவர்.
35. வெள்ளைச்சாமி சேகர் வயது 35.
36 நடராசா மயில்வாகனம், வயது 24, முத்தையன்கட்டு வாசி,
37. சுப்பிரமணியம் கணேசலிங்கம், வயது24 பெற்றோல் வியாபாரம் செய்பவர்.
38. இந்திரன்,வயது21. நல்லூர் வாசி.

## ரூபவாஹினி

06 - 01 - 1986

5-00 — செய்திகள்
5-05 — ஹீமான்
5-30 — வாடடர்வில் -காங்
6-00 — விஞ்ஞானம்
6-30 — செய்திகள் (தமிழ்)
6-55 — சப்தஸ்வர
7-25 — லிவிங் பிளானட்
8-00 — செய்திகள் (சிங்களம்)
8-20 — லிவிங் பிளானட் தொடர்
9-00 — செய்திகள் (ஆங்கிலம்)
9-20 — வெப்ஸ்டர் நகைச்சுவை
9-50 — 'வி' விஞ்ஞானத் தொடர்
10-40 — ஒளிபரப்பு முடிவு

ஸ்ருடியோ டில்கா
சிறந்த முறையில் வீடியோ படம் பிடித்துக்கொள்ள
Studio Dilkah
(பஸ்நிலைய எதிர் மேல் மாடி)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி 24174

### லொறிக்குள் படுத்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

யிருந்தன.

பண்ணைப் பாலத்தடியில் துப்பாக்கிச் சூட்டுக்கிலக்காகி யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருக்கும் இ.போ.ச. சாரதி செல்வரட்ணம் சுப்பிரமணியம் (வயது 48) இப்படித் தெரிவித்தார்.

அவர் மேலும் சம்பவம் பற்றிச் சொன்னதாவது:-

துப்பாக்கி வெடிகளையும் பொருட்படுத்தாமல் லொறியை மீன்மார்க்கற் பக்கம் கொண்டு வந்து நிறுத்தினேன்.

10 நிமிடங்கள் கழிந்து தீர்க்கப்பட்ட மற்றொரு வெடி எனது கையைத் துளைத்தது. இரத்தம் பீறிட்டு ஓடியது. மற்றக் கையால் கையைப் பொத்தியபடி அப்படியே லொறிக்குள் படுத்து விட்டேன்.

ஒன்றரை மணித்தியாலங்கள் கழித்து மெல்ல மெல்ல லொறியின் வாசலால் இறங்கினேன். தவழ்ந்து போய் கடல் அணைக்கரையோரமாக இறங்கிக் கடலில் நிறுத்தப்பட்டிருந்த படகில் ஏறினேன்.

மற்றவரின் உதவியுடன் படகுமூலமாக வாசிகசாலைக்கருகில் இறங்கினேன். பொதுமக்களின் உதவியுடன் வைத்தியசாலைக்கு வந்து சேர்ந்தேன்.

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

### யாழ் ஆஸ்பத்....

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இரத்த வங்கியில் ஏற்கனவே இரத்தத்திற்கு தட்டுப்பாடு நிலவியது.

நேற்றைய சம்பவங்களையடுத்து இரத்த வங்கியில் சேமிப்பிலிருந்த முழு இரத்தமும் காலியானது.

இதனையடுத்து அவசர சத்திர சிகிச்சைக்காக இரத்தம் வழங்கும்படி கோரிக்கை விடுக்கப்பட்டது. பெருமளவு இளைஞர்கள் இரத்தவங்கியில் கூடிநின்று இரத்த தானம் செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

இப்படி 35 பைந்து இரத்தம் பெறப்பட்டது.

ஆஸ்பத்திரிக்குள்ளும் இளைஞர்கள், ஊழியர்களுக்கு உதவி செய்ததைக் காணக்கூடியதாக இருந்தது.

#### இப்படியும் ஒரு கஷ்டம்

வேடிக்கை பார்ப்பதற்கு என்று ஆஸ்பத்திரிக்குள் முண்டியடித்துக் கொண்டு நுழைந்த பொதுமக்களால் ஊழியர்கள், வைத்திய அதிகாரிகள், உதவி செய்து கொண்டிருந்த இளைஞர்கள் பெரும் சிரமம் அடைந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

### கிழவருக்கும் இப்படி ஆசை!

குவைத், ஜன. 6

இலங்கை பெண் ஒருத்தியை மானபங்கப்படுத்திய குவைத் நாட்டைச் சேர்ந்த 60 வயதுக் கிழவருக்கு 10 வருடக் கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

இந்த நபர் அந்த இலங்கைப் பெண்ணை ஒரு நாளில் 14 முறை மானபங்கப்படுத்தினார் என்று குவைத் நாளிதழ் அல் வதான் செய்தி வெளியிட்டுள்ளது.

குவைத் வாசிக்கு இரண்டு மனைவிகள் உள்ளனர். அவர்கள் இரண்டு பேரும் இலங்கைப் பெண்கள். அவர்களின் வயது 22, 27 ஆகும்.

இச்சம்பவம் நடைபெறும் சமயம் இரண்டு மனைவிமாரும் வீடியோ படம் பார்த்துக் கொண்டிருந்தார்களாம்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: தஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம், வெளியிட்ட திகதி 06-01-1986.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org